THE HINDU
Region



# Jipmer to temporarily relocate emergency services

Jipmer will temporarily relocate emergency services to the super-specialty block annexe with effect from June 6 on account of installing upgraded fire system at the emergency services block. The upgrade aimed to enhance safety standards and quality of patient care, would be completed in about four months. Till then, uninterrupted emergency services would be provided at the super-specialty block annexe, a press note said.

THE NEW INDIAN EXPRESS

# JIPMER to shift emergency services temporarily

Puducherry: The emergency services in JIPMER would be temporarily shifted from the emergency block to the superspeciality block annexe from June 6. According to a release, the hospital is installing a fire safety system in the emergency service block, as part of its efforts to enhance safety standards. The installation work is expected to take four months, added the release. JIPMER receives several patients from various parts of Tamil Nadu, other than Puducherry. ENS

இந்து தமிழ் திசை 4 CHENNAI
செவ்வாய், ஜூன் 4, 2024

# ஜிப்மர் அவசர சிகிச்சை பிரிவு ஜூன் 6 முதல் வேறு கட்டிடத்துக்கு மாற்றம்

● புதுச்சேரி

ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக, அவசர கால சிகிச்சை பிரிவு கட்டிடத்தில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் அமைக்கும் பணிகளை ஜிப்மர் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இந்த கருவிகள் பொருத்தும் பணிகள் நிறைவடைய நான்கு மாதங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அவசர கால சிகிச்சை பிரிவு ஜிப்மர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி பிளாக் (எஸ்எஸ்பி) இணைப்பு கட்டிடத்தில் ஜூன் 6-ம் தேதி முதல் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
4.6.2024 (செவ்வாய்க்கிழமை)

## தீயணைப்பு கருவிகள் பொருத்தும் பணி:

# ஜிப்மரில் அவசர சிகிச்சை பிரிவு இடமாற்றம்

புதுச்சேரி, ஜூன்.4–

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மருக்கு உள்ளூரை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்து நோயாளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். நாள்தோறும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகள், புறநோயாளிகளாக சிகிச்சை பெறுகின்றனர். இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக தற்போது அவசர கால சிகிச்சை பிரிவில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இது குறித்து ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ஜிப்மர் ஆஸ்பத்திரியில் அவசர கால சிகிச்சை பிரிவில் தற்போது தீயணைப்பு கருவிகள் பொருத்தும் பணி நடந்து வருகிறது. இந்த பணிகள் முடிவடைய 4 மாதம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அவசர சிகிச்சை பிரிவு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாளை மறுநாள் (வியாழக்கிழமை) முதல் அவசர சிகிச்சை பிரிவு, சூப்பர் ஸ்பெசாலிட்டி இணைப்பு கட்டிடத்தில் தடையின்றி செயல்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

# ஜிப்மர் அவசர சிகிச்சை பிரிவு மாற்றம்

**புதுச்சேரி, ஜூன் 4–**

ஜிப்மரின் அவசர சிகிச்சை பிரிவு, வரும் 6 ம் தேதி முதல் சூப்பர் ஸ்பெஷாலிட்டி இணைப்பு கட்டடத்தில் மாற்றப்படுகிறது.

ஜிப்மர் மருத்துவமனையில் புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் பல பகுதியில் இருந்தும் நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர்.

இதில், புதுச்சேரி சுற்றியுள்ள பகுதியில் நடக்கும் விபத்து மற்றும் அவரச சிகிச்சை தேவைப்படுவோர், ஜிப்மரின் நுழைவு வாயில் இருந்து 100 மீட்டர் துாரத்தில் உள்ள கட்டடத்தில் அவசர சிகிச்சை பிரிவு இயங்கி வந்தது.

இங்கு, தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட உள்ளதால், தற்காலிகமாக சூப்பர் ஸ்பெஷாலிட்டி பிரிவு இணைப்பு கட்டடத்தில் அவசர சிகிச்சை பிரிவு இயங்க உள்ளது.

ஜிப்மர் மருத்துவ இயக்குநர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

நோயாளிகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக அவசர கால சிகிச்சை பிரிவு கட்டடத்தில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் அமைக்கும் பணிகளை ஜிப்மர் மேற்கொள்ள உள்ளது. இப்பணிக்களை முடிக்க சுமார் 4 மாதங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கால கட்டடத்தில் ஜிப்மர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி பிளாக் (எஸ்.எஸ்.பி.) இணைப்பு கட்டிடத்தில் நாளை மறுநாள் 6ம் தேதி முதல் தடையற்ற அவசர கால சேவைகளை ஜிப்மர் தொடர்ந்து வழங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
ஜூன் 4, 2024 செவ்வாய்க்கிழமை

4 மாதங்கள் நடைபெறும்

# ஜிப்மர் அவசர சிகிச்சை பிரிவில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள்

## நாளை மறுதினம் பணிகள் துவக்கம்

புதுச்சேரி, ஜூன் 4: புதுச்சேரி அவசர சிகிச்சை பிரிவில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் அமைக்கும் பணி 4 மாதங்கள் நடைபெறும் என ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொடர் பயிற்சியின் ஒரு பகுதியாக அவசர கால சிகிச்சை பிரிவு கட்டிடத்தில் தீயணைப்பு பாதுகாப்பு கருவிகள் அமைக்கும் பணிகளை ஜிப்மர் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது.

இந்த நிறுவன பணிகளுக்கு சுமார் 4 மாதங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலக் கட்டத்தில் ஜிப்மர் இணைப்பு கட்டிடத்தில் ஜூன் 6ம் தேதி (நாளை மறுதினம்) முதல் தடையற்ற அவசர கால சேவைகளை ஜிப்மர் தொடர்ந்து வழங்கும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.